*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*06 06 2026 SATURDAY 12 40 PM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் கொள்கைகள் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2. வேளாண் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 9 லட்சத்து 42 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. மகளிருக்கு பொருளாதார சுதந்திரம் கிடைப்பதில், Lakhpati Didi திட்டம் முக்கியப் பங்கு வகிப்பதாக பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் கூறியுள்ளார்.

4. காங்கோ, உகாண்டா நாடுகளில் பயணம் மேற்கொண்ட வெளிநாட்டவர்கள், மொரீசியஸ் நாட்டுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

5. தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேை□ எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் கொள்கைகள் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சென்ற நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஏழு புள்ளி ஏழு சதவீதமாக அதிகரித்துள்ளது நாட்டின் வலிமையை எடுத்துக் காட்டுவதாக தெரிவித்துள்ளார்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் போதும், நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மூலம், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் நோக்கில், நாடு முன்னேறி வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

>>>>><<<<<

*வங்கக்கடல் பகுதியில் உள்ள நாடுகளின் வளர்ச்சிக்காக BIMSTEC நாடுகளின் கூட்டமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.*

*BIMSTEC அமைப்பின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*வங்கக் கடல் நாடுகளின் பொருளாதார - தொழில்நுட்ப BIMSTEC கூட்டமைப்பில் இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், இலங்கை, மியான்மர், தாய்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.*

*>>>>><<<<<*

*ஸ்லோவேனியோ நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சராக பதவியேற்ற Tone Kajzer-க்கு வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அவருடன் ஒருங்கிணைந்து செயல்பட ஆவலுடன் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*பிரதமர் Janez தலைமையிலான அமைச்சரவையில் 30 வருடங்கள் தூதரக அதிகாரியாக பணியாற்றி அனுபவம் பெற்ற Tone Kajzer வெளியுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*வேளாண் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ், 9 லட்சத்து 42 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உரங்களை சீராக பயன்படுத்துவதற்கான இந்த திட்டம், தேசிய இயக்கமாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதுதொடர்பாக, 17 ஆயிரத்து 800 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், 6 லட்சத்து 98 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.*

*மேலும், சீரான உரப் பயன்பாடு, மண்வள பாதுகாப்பு, அறிவியல் தொழில்நுட்ப ரீதியிலான விவசாயம் உள்ளிட்டவை குறித்து 3 ஆயிரத்து 700 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன்மூலம், ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து, மண்வளத்தை பெருக்க முடியும் என்று வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.*

>>>>><<<<<

மகளிருக்கு பொருளாதார சுதந்திரம் கிடைப்பதில் *Lakhpati Didi* - லட்சாதிபதி சகோதரிகள் திட்டம் முக்கியப் பங்கு வகிப்பதாக பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம், ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அந்நகரத்தில் மட்டும் 92 ஆயிரம் மகளிர் இந்த திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக நடைபெற்ற நிகழ்ச்சியில், பாதுகாப்பு அமைச்சகத்தின் பொதுத்துறை நிறுவனமான *MIDHANI*-யின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ், மகளிருக்கு தையல் இயந்திரங்களை அமைச்சர் வழங்கினார்.

>>>>><<<<<

இந்திய – அமெரிக்க ராணுவ அளவிலான பேச்சுவார்த்தை அமெரிக்காவின் *Hawaii*-ல் நடைபெற்றது.

இந்திய ராணுவத்தின் லெப்டினென்ட் ஜென்ரல் *Rajiv Ghai*, அமெரிக்காவின் லெப்டினென்ட் ஜென்ரல் *Joel* தலைமையில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில், இருநாட்டு பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு வி□ யங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

>>>>><<<<<

தெலங்கானா தலைநகர் ஹைதராபாதில் போச்சம்பள்ளி கைத்தறி கண்காட்சியை மாநில அமைச்சர் திரு. நாகேஸ்வர ராவ் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த இரண்டாண்டுகளில் கைத்தறி துறையை மேம்படுத்து ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டிற்காக அரசு உறுதிபூண்டிருப்பதாக திரு. நாகேஸ்வர ராவ் கூறினார்.

>>>>><<<<<

பஞ்சாப் மாநிலம், *Ferozepur*-ல் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

*Hussainssah* கிராமம் அருகே, டிரக்கும் – ஜீப்பும் மோதிக்கொண்ட இந்த விபத்தில் காயமடைந்த 15 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறுதிச்சடங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக சென்றபோது, இந்த விபத்து நேரிட்டதாக *Ferozepur* காவல்துறை கண்காணிப்பாளர் திரு. புபேந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

*தில்லி மாள்வியா நகர் உணவக தீ விபத்தில் 21 பேர் உயிரிழந்தது தொடர்பாக மேலும் ஒருவரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.*

*முன்னதாக, இந்த உணவக உரிமையாளர் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.*

*கடந்த 3ஆம் தேதி நேரிட்ட இந்த விபத்தில் 40 பேர் காயமடைந்தனர்.*

*இந்த விபத்து தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

>>>>><<<<<

*காங்கோ, உகாண்டா நாடுகளில் பயணம் மேற்கொண்ட வெளிநாட்டவர்கள், மொரீசியஸ் நாட்டுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*அந்நாடுகளில் எபோலா வைரஸ் தொற்று பரவி வருவதை அடுத்து, இந்த அறிவிப்பை மொரீசியஸ் வெளியிட்டுள்ளது.*

*இந்த ஆப்பிரிக்க நாடுகளில் பயணம் மேற்கொண்ட மொரீசியஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள், 21 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சோதனை மேற்கொண்ட பின்னரே அனுமதிக்கப்படுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.*

*இந்த வைரஸ் பரவி வருவதை அடுத்து, அடுத்த மாதம் நடைபெறவிருந்த அமெரிக்க – ஆப்பிரிக்க வர்த்தக உச்சிமாநாடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் மொரீசியஸ் தெரிவித்துள்ளது.*

>>>>><<<<<

*அமெரிக்காவின் Seattle-ல் இந்திய மாங்கனி திருவிழா நடைபெற்றது.*

*இந்தியாவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இறக்குமதியாளர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டுள்ளனர்.*

*மஹாராஷ்ட்ராவைச் சேர்ந்த Alphonso, Kesar, ஆந்திராவைச் சேர்ந்த பங்கனப்பள்ளி, ஹிமாயத், உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த Langra, குஜராத்தைச் சேர்ந்த Rajapuri ரக மாங்கனிகள் இந்த திருவிழாவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.*

*அமெரிக்காவில், இந்தியாவின் Kesar ரக மாங்கனிகள் அதிக அளவில் விற்பனையாவதாக அந்நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் தெரிவித்துள்ளனர்.*

>>>>><<<<<

*பிரதமரின் விபத்து காப்பீட்டு திட்டத்தின் கீழ், 2 லட்சம் ரூபாய் வரை காப்பீட்டுத் தொகை பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் இந்த திட்டத்தில் இணைந்த பயனாளி ஒருவர், மத்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - பயனாளி 25 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*கேரளாவில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது.*

*இதன் காரணமாக, அடுத்த 7 நாட்களுக்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*காஸர்கோடு, Kannur, கோழிக்கோடு, வயநாடு, மலப்புரம் மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதாக கூறப்பட்டுள்ளது.*

*பாலக்காடு, திருச்சூர், இடுக்கி, எர்ணாகுளம், கோட்டயம் உள்ளிட்ட மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*திருப்பூர் மாவட்டம், பெரியபாளையத்தைச் சேர்ந்த மாணவர் ஆகர்□ன், ஒடிசாவில் நடைபெற்ற தேசிய கிக்பாக்ஸிங் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர், பல்வேறு போட்டிகளில் பங்கேற்கும் வகையில் அரசு மேலும் உதவிகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.*

*(சவுண்ட் பைட் - ஆகர்□ன் 49 செகண்டஸ்)*

*>>>>><<<<<*

*தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேை□ எதிர்கொள்கிறது.*

*இந்த போட்டி, கோவாவின் Margao-வில் இன்று மாலை 6.30 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>><<<<<*

*ஆஃப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன் வரை ஒரு விக்கெட் இழப்புக்கு 117 ரன் எடுத்துள்ளது.*

*சண்டிகரின் முல்லான்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.*

*கே.எல். ராகுல் 50 ரன்னுடனும், சாய் சுதர்ஸன் 40 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.*

*>>>>>END<<<<<*